செ.வெ.எண்.57 நாள்: 21.08.2017

## திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.4.70 லட்சம் மதிப்பிலான 8 இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பொது நிவாரண நிதி, முதியோர் உதவித்தொகை, கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (21.08.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று (21.08.2017) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் 8 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4.70 லட்சம் மதிப்பிலும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அருகன்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.பாலு என்பவர் நீரில் மூழ்கி உயிரிழந்தவரின் வாரிசு மனைவி திருமதி.சந்திரா அவர்களுக்கு ரூ.50,000/- நிதி உதவியும், மாவட்ட வழங்கல் துறையின் மூலம் 20 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் 3 பயனாளிகளுக்கு மாதம் ரூ.1000/- பெறுவதற்கான முதியோர் உதவித்தொகையினையும், மானூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து மரணமடைந்த திரு.இஸ்ரேல் அவர்களின் மகள் திருமதி.ஜெனிட்டா ஹர்மி-க்கு கருணை அடிப்படையில் ஊர்நல அலுவலர் நிலை-2-ஆக பணி நியமன ஆணையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, முதிர்கன்னி உதவித்தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் பெறப்பட்டு நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். விண்ணப்பதாரர்களுக்கு உடனுடக்குடன் பதில் அனுப்ப வேண்டும் என உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.செண்பகவல்லி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சாந்தி குளோரி எமரால்டு உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி